**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி / மண்டலம் 2,3,4 மற்றும் 7ல் குப்பை மாற்று நிலையங்களை நவீனப்படுத்தி கேட்டுதல் ரூ.7,89,44,000/—க்கான திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்குதல் / ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை.

அரசாணை (நிலை) எண்.29 நாள்: 27.02.2008

மாசி –15,

திருவள்ளுவர்

ஆண்டு – 2039,

படிக்கவும் :-

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித
எண்.தி.க.மே.து.ந.க.எண்.எ7/3686/2007 நாள் 24.10.2007.

* * * * *

ஆணை:

சென்னை மாநகராட்சி ஆணையர் தனது கடிதத்தில் சென்னை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.255.32 கோடிக்கான திட்டங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற்றுள்ளது. என்றும் இத்திட்டத்தில் உள்ள பணிக்கான பல திட்டங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள குப்பைகளை சேகரித்தல், அகற்றுதல், குப்பை மாற்று நிலையத்தில் சேகரித்து குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை மேம்படுத்துதலும் ஒரு கூறு ஆகும் எனவும், இதில் நடைமுறையில் உள்ள குப்பை மாற்று நிலையத்தை நவீனப்படுத்தி கட்டுதலும் அடங்கும் எனவும், இதனடிப்படையில் சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்காணும் நான்கு குப்பை மாற்று நிலையங்களை நவீனப்படுத்தி கட்டுவதற்கு 2007-2008 ஆண்டு அலுவலக விலை விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு மண்டலம் ஒவ்வொன்றிற்கும் ஒன்று என நான்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறி உள்ளார். மேலும் இம்மதிப்பீடுகளுக்கு சென்னை மாநகராட்சி மன்றம் 30.07.2007-ல் நடைபெற்ற தனது கூட்டத்தில் அரசின் அனுமதியினை எதிர்நோக்கி அனுமதி அளித்துள்ளது என்றும் அவர் கூறி உள்ளார்.

2. குப்பை மாற்று நிலையங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் விபரம் கீழ் வருமாறு உள்ளது:-

| வ.எண். | மண்டலம் | குப்பை மாற்று நிலையத்தின் அமைவிடம் | திட்ட மதிப்பீடு ரூபாய் | மன்ற தீர்மான எண்/நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | கோட்டம்-31, மண்டலம்-2, பேசின்பால சாலை | 1,72,75,000/- | 378/2007, நாள் 30.07.2007 |
| 2 | 4 | கோட்டம்-60, மண்டலம்-4, எஸ்.எஸ்.புரம், ஓட்டேரி | 1,99,50,000/- | 379/2007 நாள் 30.07.2007 |
| 3 | 5 | கோட்டம் 45, பேசின் யானை கவுனி சாலை, மண்டலம்-3 | 2,84,50,000/- | 380/2007 நாள் 30.07.2007 |
| 4 | 7 | கோட்டம்-106, ஐயாசாமி தெரு, மண்டலம்-7, | 1,32,69,000/- | 340/2007 நாள் 30.07.2007 |
| | | மொத்தம் | 7,89,44,000/- | |

எனவே மேற்சொன்ன நான்கு திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி அளிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் வேண்டி உள்ளார்.

3. மேற்குறித்த சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி ஆணையர் கருத்துருவினை ஏற்று முன் பக்கம் பத்தி 3-ல் விவரித்துள்ளபடி சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 2,3,4 மற்றும் 7ல் நான்கு நவீன குப்பை மாற்று நிலையங்களை ரூ.7,89,44,000/- செலவில் ஜவகர்லால் நேரு நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நவீனப்படுத்தி அமைக்கும் திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அசாகு எண்.378/நி.செ./ப்பி/08 நாள் 1.2.08 மூலம் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை -600 003.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை , சென்னை – 600 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை-600 018/35.

நகல்:

முதல் அமைச்சர் அலுவகம், சென்னை-600 009.
ஊ.வ.ம.உ.துறை அமைச்சரின் சிறப்பு உதவியாளர், சென்னை-600 009.
நிதித் துறை அமைச்சரின் சிறப்பு உதவியாளர், சென்னை-600 009
ந.ந.ம.கு.வ(அ,ந –2) துறை, சென்னை-600 009
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.